**In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.**

O.S.No.. 148/2022 தேதி- 22.01.2026

(D.W.1) மணிகண்டதேவ்

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 20 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் அதை படித்து பார்த்துதான் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ- 1 ஆவணத்தில் 1097 ME இஸ்டதான ஆவணம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இஸ்டதான பத்திரத்தில் A, B, C என்று 3 பட்டிகை இருக்கிறதா என்றால் இருக்கிறது. அதில் A பட்டிகை சொத்து ராமகிருஷ்ணபிள்ளைக்கு உரிமைப்பட்டது. B பட்டிகை சொத்து வேலாயுதன்பிள்ளை, வள்ளியம்மா பிள்ளை, மாதவிபிள்ளை ஆகியோருக்கு உரிமைப்பட்டது. C பட்டிகை கார்த்தியாயினி பிள்ளைக்கு உரிமைப்பட்டது. பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் மேற்படி B பட்டிகை என குறிப்பிட்டிருப்பது இஸ்டதான 1097ME ஆவணத்திலுள்ள B பட்டிகை சொத்தா என்றால் சரிதான். மேற்படி பி பட்டிகை சொத்தை A, B, C என்று 3 பட்டிகை சொத்துகளாக 1110 ME என பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 1110 ME ஆவணப்படி எ பட்டிகை சொத்து வேலாயுதம் பிள்ளை க்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். பி பட்டிகை சொத்து வள்ளியம்மை பிள்ளைக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். சி பட்டிகை சொத்து மாதவி பிள்ளைக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான்.

பி பட்டிகையிலிருக்கும் இளஞ்சிமூட்டுவீட்டை பொதுவாக ஓதுக்கியிருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் மேலும் யாதொரு காரணத்தாலும் அதனை கிரையம் செய்யக்கூடாது என எழுதப்பட்டிருக்கிறதா என்றால் எழுதப்பட்டிருக்கிறது. பி. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பி பட்டிகை சொத்து வள்ளியம்மைக்கு 5 அயிட்ட சொத்துகளாக கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. என்னிடம் பி.வா.சா.ஆ-. 1 ஆவணம் காண்பிக்கப்பட்டது அதில் பி பட்டிகை சொத்து 5 அயிட்ட சொத்துகளாக உள்ளது. முதலாவது அயிட்டம் நம்பர் சொத்து 77 சென்ட், சர்வே எண் 474, 475, 480 ல் கொண்டது. இரண்டாவது அயிட்ட சொத்தான 40 சென்ட் சொத்து அதன் சர்வே நம்பர் 449/1 ல் 517 எ அதில் 8 சென்ட் சொத்து போக 32 சென்ட் வள்ளியம்மைக்கு உரிமைப்பட்டது அதுதான் வழக்கு பட்டிகை சொத்து.

3 வது அயிட்டம் 50 சென்ட் சொத்து என்றால் சரிதான். 4 வது அயிட்டம் சொத்து 93 சென்ட் என்றால் சரிதான். 5 வது அயிட்ட சொத்து 30 சென்ட்

சொத்தாகும். சி பட்டிகை சொத்து மாதவிபிள்ளைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். சி பட்டிகை சொத்தில் 2 அயிட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். அதில் முதல் அயிட்ட சொத்து 75 செண்ட் சொத்து. 2 ஆம் அயிட்ட சொத்து 10 செண்ட் என்றால் சரிதான். மேற்படி 2 ஆம் அயிட்ட சொத்திற்கு சர்வே எண் 441/1-513 என்றால் சரியல்ல.

1110 ME என்றால் ஆங்கில வருடத்திற்கு 1935 என்றால் சரிதான். வள்ளியம்மை பிள்ளை எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் பி.வா.சா.ஆ. 2 என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)